முருகப்பெருமான் துணை

**மகான் வராகிமிகி அருளிய அறிவுரை ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**29.08.2023**, செவ்வாய்கிழமை

1. அறமாக வந்த ராஜனே
அரங்கனே ஞான தேசிகனே
வரமாக நீதரும் தீட்சைவழி
வையகத்தார் ஞானியாவரெனக் கூறி
2. கூறியே அறிவுரை ஆசி
குறைவிலா சோபகிருது யாளிதிங்கள்
வரமென வியதிகதி குசன்வாரம்
(சோபகிருது வருடம் ஆவணி மாதம் 12ம் நாள், 29.08.2023, செவ்வாய்கிழமை)
வராகிமிகி யானும் உலகநலமுற உரைப்பேன்
3. உரைக்கவே அரங்கன் ஞானம்
உலகை தேற்றும் ஞானம்
குறைவிலா அரங்கன் தருமம்
குவலயம் காக்கும் தருமம்
4. தருமத்தை உலகோர் ஏற்று
தக்க கிளை சங்கங்களாக
பேருலகம் எங்கிலும் செய்திட
பெருமை மிக்க தருமபலம் பெருகி
5. பெருகியே அரங்கன் உருவாக்கும்
புண்ணிய பூமியாக மாற்றம்
வருங்காலம் உலகம் கண்டு
வறுமை பிணி பிறசோடை
6. சோடை என்பதே இல்லாத
சுத்த பூமி ஞானபூமியாக
இடரில்லா பாதுகாப்பு பூமியாக
இந்த உலகம் மாற்றம் காணும்

7. காணவே அரங்கன் உபதேசம்
கனிவேலவன் தரும் உபதேசம்
ஞானமாக ஏற்றுத் தொடர
நம்பிக்கை வைத்து வணங்கிட
8. வணங்கி மாற்றம் காணும்
வரமாக வள்ளல் தன்மை ஆக
இணங்கி குருவருள் வரவே
எல்லா சூட்சுமம் விளங்கி
9. விளங்கியே பற்று விலக்கி
விரும்பி சன்மார்க்க பலம்
களங்கமற உணர்ந்து தெளிந்து
கருணைபட வாழ்வை நடத்தி
10. நடத்தி எவ்வுயிரும் தன்னுயிராய்
நன்மை தந்து மதித்து
இடரின்றி சரவணச் சுடரேற்றி
எந்நாளும் இறைநிலை காணும்
11. காணும் வழிபாடு தொடர்ந்து
கடைத்தேறுவர் அரங்கனால்
ஞான உலகமும் படைப்பர்
நாட்டிய அறிவுரை ஆசி முற்றே

—சுபம்—